முக்கிய வார்த்தைகள்:
இளமை / இளைஞர்
வழிகாட்டு / வளர்த்தல்
பங்கு

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**03 ஜூன் 2026 / 17 துல்ஹஜ் ஹிஜிரி 1447**

# நேர்மையான இளைஞரை உருவாக்குவது – பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒரு பொறுப்பு

**ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّٰهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்போமாக; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக; புனிதமிக்க இந்த முஹர்ரம் மாதம், இம்மையிலும் மறுமையிலும் தொடர்ந்து நன்மையின் பால் நம்மை அழைத்துச் செல்லட்டுமாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இஸ்லாமியப் பார்வையில் **இளைஞர்களின்** நிலை என்ன என்பதைப் பற்றி எப்போதாவது நாம் சிந்தித்தது உண்டா?

இக்கேள்விக்கானப் பதிலைப் பெறுவதற்கு, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் தோழர்களில் ஒருவர் **இளைஞர்களை** எவ்வாறு வர்ணித்தார் என்பதில் சிந்திக்க வேண்டும். அத்தோழர் தான், அபூ ஸயீத் அல்-குத்ரீ [ரலி] ஆவார். அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற போது **இளைஞராக** இருந்தார்கள்.

**இளைஞர்கள்** கல்வியைக் கற்பதற்காக வரும் போதெல்லாம், அவர்களைப் பார்த்து அபூ ஸயீத் அல்-குத்ரீ [ரலி] அவர்கள் : *ரசூலுல்லாஹி [ஸல்] அவர்களின் நம்பிக்கைக்குரிய அறங்காவலர்களே வருக!* எனக் கூறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், எவர்களிடம் அடிக்கடி நினைவூட்டி, பொறுப்பை ஒப்படைத்து வந்தார்களோ, அவர்கள் தான் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் நம்பிக்கைக்குரிய அறங்காவலர்கள் என அழைக்கப்பட்டார்கள். இவ்வாறுதான், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் மேற்கண்ட தோழர் **இளைஞர்களைப்** பற்றி வர்ணித்தார்கள். குறிப்பாக, எவர்கள் ஆர்வத்துடன் கல்வியைக் கற்று, அதனை மனிதகுல நலனுக்காகப் பகிர்ந்து கொண்டார்களோ அவர்களைப் புகழ்ந்து வர்ணித்தார்கள்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

**இளைஞர்களின்** வாழ்க்கையானது, அவர்களைச் சுற்றியுள்ள பெரியவர்களால் ஏற்படுத்தப்படும் சூழ்நிலைகளால் வடிவமைக்கப் படுகின்றது என்பதை நாம் அறிவோம். எனவே தான், இறைவனின் புனிதமிக்க **வழிகாட்டுதலுக்கு** இணங்க, **இளைஞர்களுக்கு வழிகாட்டுவது**, ஒவ்வொரு பெரியவர், குறிப்பாக, ஒவ்வொரு ”முஃமின்” [ஓரிறை நம்பிக்கையாளர்] மீது புனிதக் கடமையாக உள்ளது.

இது சம்பந்தமாக, திருக்குர்ஆனில் முன்மாதிரியான வரலாறுகளும், ஆலோசனைகளும் பிரார்த்தனைகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன; அவை **இளைஞர்களை வளர்த்துப்** போஷிப்பதற்குப் பொருத்தமான **வழிகாட்டுதல்களாக** உள்ளன. அவற்றில் ஒன்று, திருக்குர்ஆனின்

"லுக்மான்" எனும் அத்தியாயத்தின் 17-வது வசனத்தில் காணப்படும் ஒரு நேர்மையான மனிதர் தனது மகனுக்குச் செய்த பின்வரும் உபதேசம் ஆகும்:

يَٰبُنَيَّ أَقِمِ ٱلصَّلَوٰةَ وَأۡمُرۡ بِٱلۡمَعۡرُوفِ وَٱنۡهَ عَنِ ٱلۡمُنكَرِ
وَٱصۡبِرۡ عَلَىٰ مَآ أَصَابَكَۖ إِنَّ ذَٰلِكَ مِنۡ عَزۡمِ ٱلۡأُمُورِ ١٧

பொருள்: *"எனது அருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டுவாயாக; [மனிதர்களுக்கு] நன்மையை ஏவி, தீமையை விட்டும் அவர்களைத் தடுப்பாயாக; உனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வாயாக; நிச்சயமாக இதுவே வீரமுள்ள செயல்களில் உள்ளதாகும்" [இவை தான், சிறந்த தீர்வுகளைத் தரும் விஷயங்களாகும்]*

**இளைஞர்களின்** நடத்தைகளைச் சிறப்பாக வடிவமைப்பதற்கும் அவர்களை ஆற்றல்மிக்கவர்களாக ஆக்குவதற்கும் "சீராஹ்" எனும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஏராளமான முன்மாதிரிகளும் சிறந்த அணுகுமுறைகளும் உள்ளன. உதாரணமாக, ஜைத் பின் தாபித் [ரலி] எனப்படும் தனது தோழர்களில் ஒருவரிடம் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கவனியுங்கள்:

அக்காலத்தில் ஜைத் **இளைஞராக** இருந்தார்; அவரது சிறிய வயதின் காரணமாகவே, பத்ருப் போரில் முஸ்லிம்களோடு இணைந்து போரிடுவதற்கு அவருக்கு ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் அனுமதிய ளிக்கவில்லை. எனினும், அவரது ஆர்வத்தை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் குறைத்து மதிப்பிடவில்லை; அவரை முற்றிலும் புறக்கணித்து விடவுமில்லை. மாறாக, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், அவரை அங்கீகரித்தார்கள்; படித்தல் மற்றும் மனனம் செய்தல் ஆகியவற்றில் அவரிடம் காணப்பட்ட திறமையை மதித்தார்கள். சமுதாயத்துக்காகப் பங்களிப்பு செய்வதற்காக மாற்று வழியை ஜைத் [ரலி] அவர்களுக்கு ஷிபாரிசு செய்தார்கள். அதாவது, அக்காலத்தில் மதீனாவில் வாழ்ந்த

யூதர்களின் ஹீப்ரு மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெறுமாறு வழிகாட்டினார்கள்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் உபதேசத்தில் கவனம் செலுத்திய ஜைதுப்னு தாபித் [ரலி] அவர்கள், ஹீப்ரு மொழியைக் கற்று **இளம் வயதிலேயே** ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் அதிகாரப்பூர்வமான எழுத்தாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணி செய்ய ஆரம்பித்தார்கள். இவ்வாறுதான் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் உச்சகட்டமான கருணைச் சிந்தனையுடனும் தூர நோக்குப் பார்வையுடனும் தன்னைச் சுற்றியிருந்த **இளைஞர்களின்** திறமையை **வளர்த்து,** அவர்களைப் பலப்படுத்தினார்கள். பிற்காலத்தில், இறைத்தூதர்[ஸல்] அவர்கள் இறைவனடி சேர்ந்த பின், ஜைத் [ரலி] அவர்கள் திருக்குர்ஆனைத் தொகுத்து, கோர்வை செய்வதில் முக்கியப் பங்காற்றிய அறிஞர் ஆனார்கள்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

சற்று முன் வழங்கப்பட்ட உதாரணங்கள், **இளைஞர்களுக்கு** *வழிகாட்டுவதில் நாம் எந்தளவு பங்காற்றியுள்ளோம்?* என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும், சிந்திக்க வேண்டுமென்றும் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நாம் எப்போது கடைசியாக, ஓரிறை நம்பிக்கையாளர்களின் வருங்காலத் தலைமுறையினராக உள்ள நமது இளைஞர்களின் நடத்தையை சிறப்பாக வடிவமைப்பதக்கான சிந்தனையையும் உணர்வையும் பெற்று, அதற்கான மூலமாகவும் ஆதாரமாகவும் அமைந்தோம்? எனவும் சிந்திக்க வேண்டும்.

இன்றைய "குத்பா" பிரசங்கம், இவ்விஷயத்தில் நாம் செயல்படுத்துவதற்காக நான்கு விஷயங்களை நமக்குப் பரிந்துரை செய்கிறது:

**முதலாவதாக: நாம் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருப்பது**

**இளைஞர்கள்** கூர்ந்து கவனிப்பவர்களாக இருக்கின்றார்கள்; அவர்கள் வார்த்தைகளை விடச் செயல்களாலேயே அதிகம் ஈர்க்கப்படுபவர்களாக இருக்கின்றார்கள். நாம் நன்மைகளைச் செய்வதையும் தொழுவதையும்

பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதையும் அவர்கள் பார்க்கவில்லை யெனில், அவற்றையெல்லாம் செய்யுமாறு வெறுமனே அவர்களுக்கு நாம் அறிவுரை செய்து கொண்டிருப்பது பயனளிக்காது. எனவே நாம் அவர்களுக்கு முதலாவதான மற்றும் முக்கியமான முன்மாதிரியாக இருப்பது அவசியமாகும். ஓரிறை நம்பிக்கையாளர்களுடைய நன்னடத்தையின் கண்ணாடியாக நாம் திகழ வேண்டும்; அதன் மூலம் இளைஞர்கள் தம்மைச் சீர் செய்து கொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக, ஞானத்துடன் நுட்பமாக வழிகாட்டுங்கள்**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் **இளைஞர்களின்** ஆத்மாக்களை, திட்டுதல், கேலி செய்தல், அடிக்கடி குறை கூறுதல் ஆகியவற்றால் வளர்க்கவில்லை; இவ்வாறுதான், இளைஞர்களுடனான அவர்களின் அணுகுமுறை இருந்தது. ஒவ்வொரு **இளைஞனிடமும்** காணப்பட்ட ஆற்றலை, மென்மையாகவும் உச்சகட்டமான அன்பாலும் வெளியே கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு தவறையும் சரி செய்வது அவசியம் தான்; ஆனால் அதற்கான அணுகுமுறை ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும்; கற்றுக் கொள்ளும் செயல்பாட்டின் ஒரு பகுதியாகவே தவறுகளைப் பார்க்க வேண்டும்.

**மூன்றாவதாக: அவர்கள் மீது நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்**

**இளைஞர்களின்** திறமைகளை குறைவாக மதிப்பிடுவது கூடாது; சற்று முன்பு விரிவாகக் கூறப்பட்டதைப் போன்று, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், எவ்வாறு ஜைதுப்னு தாபித் [ரலி] அவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பை வழங்கினார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நமது **இளைஞர்களிடம்** குறிப்பிட்ட திறமைகள் குறைவாக இருப்பதை நாம் அறிந்தால் அத்திறமைகளை அவர்கள் வளர்த்துக் கொள்வதற்கு நாம் **வழிகாட்ட** வேண்டும். அவர்களின் ஆர்வங்கள் மற்றும் ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டு, பங்களிப்புகளைச் செய்வதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்துங்கள்; அப்போது அவர்கள், தாம் மதிக்கப்படுவதாக உணர்வார்கள். ஒரு காலத்தில், ஓரிறை நம்பிக்கையின் அமானிதத்தையும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளையும் அவர்களே சுமப்பவர்களாக இருப்பார்கள். இன்ஷாஅல்லாஹ்.

**நான்காவதாக: நமது இளைஞர்களுக்காக நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்**

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், தன்னைச் சுற்றியிருந்த **இளைய** சமுதாய மக்களின் நலனுக்காக எப்போதும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்பவர்களாக இருந்தார்கள்; உறவுகளை வலுப்படுத்துவதையும் ஊக்கமளிப்பதையும் கடந்து, அல்லாஹ் தான் நாடிய எவருக்கும் நன்மையை வழங்க வல்லவன் எனும் நமது நம்பிக்கையையும் அல்லாஹ்வையே சார்ந்திருப்பதையும் நமது பிரார்த்தனைகள் உறுதி செய்கின்றன.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நேர்மையான தலைமுறையினரை உருவாக்குவதற்கு முயற்சி செய்வது நம்மனைவர் மீதான கடமையாக உள்ளது. மூத்தவர்களாகவும் அனுபவமிக்கவர்களாகவும் இருப்பவர்கள் தமது பங்கை ஆற்றுவது அவசியமாகும்; இளைஞர்களோ மூத்தவர்கள் வழங்கும் **வழிகாட்டுதலை** அடைந்து கொள்வதற்குத் திறந்த மனதுடன் காணப்பட வேண்டும். இது ஒருதலைப்பட்சமான உறவு அல்ல; மாறாக, இது பரஸ்பர நன்மையையும் பலப்படுத்துவதையும் அளிக்கக்கூடிய ஒரு பிணைப்பாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு மத்தியிலான அன்பையும் பாசத்தையும் பலப்படுத்துவானாக! நமது ஒவ்வொரு முயற்சியிலும் **வழிகாட்டுவானாக!** நம்மனைவர் மீதும் தனது கருணை மழையைப் பொழிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوْهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاعْتِدَاءَ. اللَّهُمَّ إِنَّا نَسْتَوْدِعُكَ أَنفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ.

اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكانٍ عامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالِمِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَة حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.